6

# முல்லைத்திணை இனக்குழுவின் தற்கால ஆடு மேய்ச்சல் தொழிலும் அதில் காணலாகும் சிக்கல்களும்

# The contemporary sheep herding occupation of the Mullai landscape community and the challenges faced in it

**ந. சீனிவாசன், இரவி. ச**

**தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர், தமிழ்நாடு, இந்தியா.**

**Seenivasan.N, Ravi. S**

Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, Tamil Nadu, India.

ORCID: https://orcid.org/0009-0006-9660-9946

**DOI:** 10.5281/zenodo.18737900

**Abstract**

*A crucial stage in the intellectual evolution of humans, who once lived like animals, was the technique of domesticating animals. Humans domesticated animals for economic purposes, labor, meat, and hunting. A significant phase in this process was the rearing of cattle. The milk obtained from cows, and the curd, butter, and ghee derived from it, contributed to their economic development. The people who engaged in this occupation were the inhabitants of the Mullai region during the Sangam period. Cattle were considered the primary form of wealth for these people. That is, in the era of the barter system, cattle constituted wealth. Raiding and recovering cattle formed the basis of the first wars. It is also noteworthy that cattle were raised for meat. Studies suggest that the pastoral people who raised cattle during the Sangam period are the ancestors of the present-day shepherds, who continue to practice sheep herding as their caste-based occupation. Just as protecting cattle was a complex task during the Sangam period, shepherds today face various challenges in their sheep-herding profession.*

**ஆய்வுச் சுருக்கம்**

விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதனின் அறிவுத் தோற்றவியலில் முக்கியமான கட்டம் என்பது விலங்குகளைப் பழக்கப்படுத்திக்கொள்ளும் நுட்பமாகும். பொருளாதாரத்திற்காகவோ, உழைப்பிற்காகவோ, இறைச்சிக்காகவோ, வேட்டையாடுவதற்காகவோ விலங்குகளைப் பழக்கினான். அதில் முக்கியக் கட்டம் என்பது ஆநிரைகளை வளர்த்த நிலையாகும். பசுக்களிலிருந்து கிடைத்த பால் அதிலிருந்து எடுக்கப்பட்ட தயிர், வெண்ணெய், நெய் போன்றவை அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பைச் செய்தன. இந்தத் தொழிலைச் செய்து வந்தவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்த முல்லைத் திணை மக்களாவர். மனிதர்கள் முதல் செல்வமாக கருதப்பட்டது ஆநிரைகளைத்தான். அதாவது பண்டமாற்று முறை இருந்த காலகட்டத்தில் ஆநிரைதான் செல்வம். அதை கவர்தலும், மீட்டலும்தான் முதல் போருக்கான அடிப்படையாகும். இதில் இறைச்சிக்காகவும் ஆநிரைகள் வளர்க்கப்பட்டுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு ஆநிரைகளை வளர்த்த ஆயர் மக்கள்தான் இன்று இடையர்கள் என்ற சாதி அடையாளத்துடன் ஆடு மேய்க்கும் தொழிலைச்

*செய்து வருகின்றனர் என்று ஆய்வுகள் முன்வைக்கப்படுகின்றன. சங்க காலத்தில் ஆநிரையைப் பாதுகாத்தல் எவ்வளவு சிக்கலான ஒன்றாக இருந்ததோ அதைப்போல இன்றைய நிலையில் இடையர்கள் ஆடுமேய்க்கும் தொழிலில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.*

**Keywords:** ஆயர், இடையர், சங்க காலம், ஆடு மேய்த்தல், பெண், முல்லை

**முன்னுரை**

சங்க கால முல்லைத்திணை மக்களின் தொழில்சார் வாழ்வியல் முறைகளை அடிப்படையாகக் கொண்ட இடையர் இன மக்களில் பெருந்தாலி கட்டி இடையர் என்ற உட்சாதி மக்கள் ஆடு மேய்க்கும் தொழிலை செய்து வருகின்றனர். ஆநிரைகளைக் காத்தலில் அன்றைய சமூகம் எதிர்கொண்ட சிக்கல்களைப் போல் தற்காலத்தில் ஆடுகளை மேய்ப்பதில் இம்மக்கள் பல்வேறு விதமான சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவ்வாறு ஆடுமேய்க்கும் தொழிலில் ஆடுகளுக்கு ஏற்படும் சிக்கல்கள், ஆடுமேய்ப்பவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், இத்தொழிலில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் ரீதியான பிரச்சனைகள், ஆண்கள், பெண்களுக்கு ஏற்படும் வாழ்வியல் சிக்கல்கள் ஆகியவை இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

**எஞ்சி நிலைத்த மேய்ச்சல் தொழில்**

தற்காலத்தில் இந்தியா என்பது பல்வேறு மாநிலங்களின் தொகுப்பாக உள்ளதுபோல் சங்க காலத்தில் தமிழக நிலப்பரப்பு சேர, சோழ, பாண்டிய, குறுநில மன்னர்களின் ஆட்சிப் பரப்பிற்கு ஏற்ப பிரிந்திருந்தது. அதேபோல் நிலங்களும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பிரித்து நோக்கப்பட்டுள்ளது. அதில் முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்களை ஆயர், ஆய்ச்சியர் என்று அடையாளப்படுத்துகிறது சங்கப் பனுவல்கள். கால்நடைகள் வளர்த்தலை முக்கியத் தொழிலாக கொண்டிருந்த இனக்குழுச் சமூகமாக முல்லைத்திணை மக்கள் இருந்துள்ளனர். அவ்வாறு குறிப்பிட்ட அம்மக்களின் பண்பாட்டை முழுமையாக அறிந்து கொள்வதுதான் இனவரைவியல் என்பதாகும். இதை "தனித்துவமான வாழ்வியல் முறைகளைக் கொண்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்து கொண்டு அதனை முறையாகத் தொகுத்து வழங்கும் அறிவியலே இனவரைவியலாகும்." (2016, ப. 132) என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுவதிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல், ஓர் இனக்குழு ஒரு காலத்தில் மேற்கொண்ட பண்பாட்டுக் கூறுகள் காலப்போக்கில் மறைந்து போவது ஒருபுறம் இருந்தாலும், திரிந்த வடிவத்தில் அது பின்பற்றப்பட்டு வருவது கவனிக்கத்தக்கதாகும். அதை டைலர் என்பவர் எஞ்சிநிலைத்தவை என்று குறிப்பிடுகிறார்.

"ஒரு சமூகத்தில் சில வழக்கங்கள், கூறுகள், கூறுகளின் தொகுதிகளாக அமையும் பகுதிகள் போன்ற எந்த ஒன்றும் பல காலகட்டங்களைக் கடந்து செல்லும்போது அவற்றின் செயல்களை இழக்க நேரிடும். சில சூழல்களில் அச்செயலிழந்த கூறுகள் வருங்காலத்தில் தொடர்ந்து எடுத்துச் செல்லப்பட்டு அவற்றின் தன்மைகள் சமூகத்தின் நிகழ்வுகளில் ஏதோ ஒரு வகையில் வெளிப்படும் இயல்புடையனவாக இருக்கும். அவையே எஞ்சிநிலைத்தவை ஆகும்." (2012, ப. 2) என்று பக்தவத்சல பாரதி டைலரின் எஞ்சிநிலைத்தவை குறித்த மையக்கருவை எடுத்துரைக்கிறார். இவ்வாறு பெருந்தாலி கட்டி இடையர் இன மக்கள், முல்லைத் திணைக்குடிகள் மேற்கொண்ட கால்நடை வளர்த்தல், மேய்ச்சல், காத்தல் தொழிலை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சங்க காலத்தில் ஆநிரைகள் பொருளாதார வளக் குறியீடாக காணப்பட்ட நிலையில் தற்காலத்தில் கால்நடைகளில் ஆடுகள் பொருளாதார வளமாக இருந்து வருகிறது. இந்த ஆடு வளர்ப்பில் இவ்வின மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை இனி காண்போம்.

### ஆடுமேய்க்கும் தொழிலில் உள்ள சிக்கங்கள்

ஆடுமேய்த்தல் தொழிலை ஒரு தனிப்பட்ட நபரால் நடத்த இயலாது. இத்தொழிலில் குடும்பத்தில் உள்ள பெரியவர் முதல் சிறுயவர் என ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் பங்கெடுத்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தொழிலில் காலநிலை மாற்றம் என்பது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வெயில் காலங்களில் மேய்ச்சல் இல்லாமல் போவது, மழைக்காலங்களில் மேய்ச்சலுக்குச் செல்ல முடியாத நிலை போன்றவை சிக்கல்களாக அமைகின்றன.

### மழைக்காலத்தில் ஆடுகளுக்கு ஏற்படும் சிக்கல்கள்

ஆடு மேய்க்கும் இவ்வின மக்களிடம் ஆட்டுத் தொழிலில் உள்ள சிக்கல்கள் என்ன என்று கேட்டால், அதற்கு "ஆடு மாடு இல்லாதவன் அடைமழைக்கு ராஜா, பெண்டு பிள்ளை இல்லாதவன் பஞ்சத்துக்கு ராஜா" என்ற இந்தப் பழமொழியைத்தான் முதலில் கூறுகின்றர்.

ஏனெனில் கடுமையான மழைக்காலத்தில் ஆடுகள் மற்றும் குட்டிகளை வளர்த்துப் பாதுகாத்தல் என்பது மிகவும் சவாலானதாகும். அதிகப்படியான நோய்கள் தாக்கும் காலமாகவும் அதிக சிரமங்கள் உள்ள காலமாகவும் மழைக்காலம் உள்ளது.

இச்சமயத்தில் ஆடுகளை ஒரே இடத்தில் இருக்குமாறு தொழுவில் அடைக்கின்றனர். இன்றைய சூழலில் சிலர் ஆடுகளுக்கு மேற்கூரைகள் அமைத்தும் பரண் அமைத்தும் பாதுகாக்கின்றனர். ஆனால் பெரும்பாலானோர் தார்ப்பாய்களைப் போட்டு தரையிலேயே அடைக்கின்றனர்.

மழைக்காலத்தில் தான் அதிகமான குட்டிகளை ஆடுகள் ஈன்று புறந்தள்ளுகின்றன. இதனால் குட்டிகளை ஈனுவதில் பிரசவக் கோளாறு ஏற்பட்டு ஆடும் குட்டியும் அல்லது குட்டி மட்டும் என்று சேதம் ஏற்படுகிறது.

ஈன்ற குட்டிகளை மழை, வெயிலில் இருந்து பாதுகாக்க கொடாப்புகளில் அடைத்து வைத்து திறந்துவிடுகின்றனர். இச்சமயத்தில் குட்டிகளின் மீதான வாசம் மாறும் போது இது தன் குட்டி இல்லை என்று பால் குடிக்க விடாமல் ஆடுகள் விலகிச் செல்கின்றன. சில ஆடுகள் ஈன்ற குட்டிகளை மறந்துவிட்டு ஏற்கனவே ஆடுகளுடன் மேய்ச்சலில் மேய்ந்து கொண்டிருக்கும் முத்தைய குட்டியை மறுபால் குடிக்கவிடும். பால் பற்றாக்குறை உள்ள குட்டிகள், ஆடுகள் தன்குட்டிகளைப் பால்குடிக்க விட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் திருட்டுப்பால் குடிக்க தொந்தரவு செய்விதை அலப்புதல் என்கின்றனர். ஈரம் காரணமாக பால் செரிமானமாகாமல் குட்டிகள் இறத்தல், காய்ச்சல், சலி, வயிற்றுப்போக்கு (கழிச்சல்) கோளாறுகளால் சேதம் ஆகின்றன. சத்துப் பற்றாக்குறையாலும் நோய் போன்ற பிற காரணங்களாலும் குறைமாதத்தில் குட்டிகளை கரைத்துத் தள்ளி விடுகின்றன. இவை அம்மக்களின் வருமானத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஈரத்தில் நிற்பதால் கால்களில் புண்கள் ஏற்படுதல், ஏற்கனவே குத்திய பழையமுட்கள், புதியதாக குத்திய முட்களால் ஏற்படும் வலி, வேதனை, அதனைத் தொடர்ந்து சீல் கட்டுதல், கால்கானை போன்ற காரணங்களால் அதிகமான ஆடுகள் மழைக்காலங்களில் நொண்டுகின்றன. இவற்றை சரி பார்ப்பதற்கும் மருந்து போடுவதற்குமே மழைக்காலத்தில் தனியாக ஒருவர் தேவைப்படும் நிலை ஏற்படுகிறது.

வாய்ப்புண் நோய், காய்ச்சல், பிற நோய்களின் காரணமாக நடக்க முடியாமல் போய் விடுகின்றன. புண்கள், உடைந்த கட்டிளின் காயம் ஏற்பட்ட இடங்களில் புழு, குச்சிகள்,

சுனைப்பயிர்களில் உள்ள முழங்குகள், ஊசிப்புட்கள் இவற்றினால் கண்கள் கலங்கி தெரியாமல் போகுதல் போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன.

உடல்நிலை சரியில்லாத ஆடுகளை வீட்டில் அல்லது தொழுவிலேயே விட்டுச் செல்லும் போது அவைகளைப் பார்த்துக் கொள்வதற்கு தனியாக ஓர் ஆள் தேவைப்படுகிறது. ஆட்கள் பற்றாக்குறை இருக்கும் போது இவைகளைப் பார்த்துக்கொள்ள முடிவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கில் ஆடுகள் அடித்துச் செல்லுதல், இடிமின்னல் தாக்குதலில் மனிதர்களும் ஆடுகளும் பாதிக்கப்படுதல், பள்ளம், மேடுகள், கிணறுகள் என்று வேறுபாடுகள் தெரியாமல் மழைநீரில் சிக்கித்தவித்தல், திடீரென உடைந்து விழும் மரங்களால் ஏற்படும் சேதாரம், பழைய கட்டிடங்களில் மழைக்கு ஒதுங்கும் போது கட்டிடங்கள் இடிந்து விழுதல் என்று பேரிடர்களில் சிக்கித்தவிக்கின்றனர்.

இவ்வாறு இயற்கைச் சீற்றங்களான இடிமின்னல், புயல் வெள்ளம், சூறாவளிக்காற்று, கடுமையான மழை, பனி, வெயில் போன்றவையும் ஆடுமேய்த்தல் தொழிலைப் பல வகைகளில் வதைக்கின்றன என்பதை அறியமுடிகிறது.

**ஆடு மேய்ச்சலில் அம்மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்**

ஆடுகள் மற்றும் மனிதர்களை நாய்கள் கடித்தல், புலி அடித்தல், சிறுத்தை அடித்தல், நரிதூக்குதல், மாடு முட்டுதல் போன்றவையும் ஏற்படுகின்றன. காக்கை கழுகுகள் குட்டிகளை ஊனப்படுத்திவிடுதல், தின்றுவிடுதல், மனிதர்களால் களவாடப்படுதல் என்று மனிதன் விலங்கு, மனிதன் மனிதன், விலங்கு விலங்கு மோதல்கள் ஏற்படுகின்றன.

குட்டிகளைத் தாயாட்டிடம் இருந்து ஒதுக்கி கொடாப்புகளில் அடைக்க முயற்சிக்கும் போதும், வேற ஒருவரின் ஆடுகளில் சேர்ந்த ஆடுகள் குட்டிகளைப் பிரிக்கும் போதும் மிகப்பெரிய சவாலாக சில நேரங்களில் அமைந்துவிடுகிறது.

ஆடுகளை மேய்க்கும் போது ஏற்படுகின்ற சினத்தை ஆடுகளிடமோ, மனிதர்களிடமோ, குடும்பத்திலோ எதிரொளிக்கின்றனர். இதனால் அவர்கள் இயல்பிலேயே மனிதர் தன்மையிலிருந்து மிருகத்தன்மை அளவுக்கு சில நேரங்களில் மாறிவிடுகின்றனர் அல்லது இத்தொழில் மாற்றிவிடுகின்றது. இதனால் எதற்கும் அஞ்சாமல் அடிதடி, வெட்டுக்குத்து, சண்டை சச்சரவுகளில் மூர்க்கத்தனமாக ஈடுபடுகின்றனர். இதுபோன்ற பல காரணங்களுக்காகவும் உடல் சோர்வைப் போக்குவதற்காகவும் மது அருந்துதல், கள்குடித்தல் போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றனர்.

கடுமையான மழைபெய்தாலும் பனிபெய்தாலும் கிடையில் இரவுக் காவல் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. தூக்கத்தைக் கட்டுப்படுத்த இரவு வேலைகளைச் செய்ய, மழை, பனியில் இருந்து மடைமாற்றிக் கொள்ள என இவர்கள் புகையிலைப் பொருட்கள், பீடி, சிகரெட், தேனீர் போன்றவற்றிற்கு அடிமையாகி விடுகின்றனர்.

சில நேரங்களில் கிடாய் முட்டுதல் மற்றும் ஆடுகளைப் பிடிக்கும் போது கண், காது, உதடுகளில் மற்ற சில இடங்களில் அடிபடுதல், இரத்தக்காயம் போன்றவை ஏற்படுகின்றன.

**வலசை போதல் (அ) பயணம்**

பல்வேறு காரணங்களுக்காக இவர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு குடியிருப்பை மாற்றுகின்றனர். மழைக் காலத்தின் தொடக்கத்தில் பாதுகாப்பான மேட்டுப் பகுதிகள்,

கடின மண் கொண்ட நிலப்பகுதிகள், மலையின் அடிவாரங்கள், மணல் பாங்கான பகுதிகளுக்குச் செல்கின்றனர். இதேபோல் மழைக்காலம் முடிந்த பின்பு புல்வெளிகள், அறுவடை நடைபெறும் பகுதிகள் ஆகிய பகுதிகளுக்குப் பயணத்தை மேற்கொள்கின்றனர். வறட்சி ஏற்படும் போது, குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் பொழுது, மழைப் பொழிந்து மேய்ச்சல் உள்ள பகுதிகளை நோக்கியும், குடிநீர் கிடைக்கின்ற பகுதிகளை நோக்கியும் பயணம் மேற்கொள்கின்றனர். ஆடுகளின் நலன்கருதி மேய்ச்சலுக்காகத் தொடர்ந்து இடம்மாறிக் கொண்டே இருக்கின்றனர். அவ்வாறான பயணம் ஒரு நாளில் முடியலாம், பலநாட்கள் கூட தொடர்கிறது.

சாலை வழிப் பயணம் வாகனப் பெருக்கத்தின் காரணமாக பெரும் சிரமமாக அமைந்துவிடுகிறது. வாகனங்களின் ஒலியைக் கேட்டு ஆடுகள் ஓடுதல், தீடீரென வெடிக்கும் டயர் சத்தம், பட்டாசு சத்தம், transformer வெடித்துவிடுதல், புகைவண்டி ஒலி ஆகியவை சிக்கலை ஏற்படுத்துகின்றன. வாகனங்களை இயக்கத் தெரியாமல் வருபவர்கள், வாகனம் வந்தால் ஆடுகள் தானாக ஒதுங்கி விடும் என்று நினைப்பவர்கள், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர்களால் மனிதனுக்கும் ஆடுகளுக்கும் கைகால் முறிவு, உயிர் சேதம் ஏற்படுகின்றன.

மேய்ச்சலில் (அ) பயணத்தில் செல்லும்போது விபத்தினாலோ, மூப்பினாலோ, நோயினாலோ இறக்கும் ஆடுகள், கொட்டிக்கிடக்கும் அதிகமான சோறு, குப்பைகளைத் தின்று வயிறு ஊதி நடக்கமுடியாமல் போதல் அல்லது இறந்து விடுதல், சொக்குத் தாக்கும் இலைகள், பயிர்கள், காய்களைத் தின்று உடனே இறந்துவிடுதல் இதுபோன்ற சூழலில் இறக்கும் ஆடுகளை மேய்ச்சலின் போது பாதுகாக்கவும், தூக்கிச் சுமக்கவும் முடியாமல் தவிக்கின்றனர். இதேபோல் மேற்கண்ட காரணங்கள் ஏதாவது ஒன்றினால் நடக்க முடியாமல் போகும் ஆடுகளை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்ப்பது பெரும் இன்னலாக அமைகின்றது.

இரண்டு மூன்று ஆடுகள் மேய்ச்சலின் போதோ, பயணத்தின் போதோ குட்டிகளை ஈன்றுவிட்டால் அவற்றைத் தூக்கிச் சுமப்பது மிகவும் கடினமானதாகி விடுகிறது. மேய்ச்சலுக்காக ஆங்காங்கே செல்லும் ஆடுகளை மடக்கித் தடுக்கவும் முடியாமல் அவற்றைத் தூக்கிக் கொண்டு ஓடவும் முடியாமல் ஓடினால் தாயாடுகள் பின்னாடியே வந்து காலில் உள்ள செருப்பைப் பிய்த்துவிடும் அல்லது தூக்கிச் சுமப்பவர்களின் குறுக்கே பாய்த்து அவர்களைத் தள்ளிவிட்டு விடும் நிலை ஏற்படுகிறது. சில சமயங்களில் வாகனப் போக்குவரத்து உள்ள பகுதிகளில் செல்லும் போது தாயாடுகள் வாகனங்களில் அடிபட்டு விடுவதால் இழப்புகள் ஏற்படுகின்றன.

தனியாக மேயவோ, குப்பைகளைத் திங்கவோ, கூட்டமாகவோ, கூட்டத்தை மறந்து மேய்ந்து கொண்டிருப்பதனாலோ அல்லது விலங்குகளால் துரத்தப்படுவதனாலோ காணாமல் போகிறது. அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் சவாலானதாக மாறிவிடுகிறது. அப்படிக் காணாமல் போகும் ஆடுகள் சிலநேரங்களில் வாகன விபத்தில் சிக்கி விடலாம், கிணறுகளில் விழுந்து விடலாம், விலங்குகளுக்கு இரையாகலாம், பிறர் ஆடுகளில் சென்று கலந்து விடலாம், விவசாயத்தை அழித்துவிடலாம், மலைகளில் தங்கினால் வரையாடுகளாகவும் மாறிவிடலாம். இவ்வாறு காணமல் அல்லது பிரிந்த ஆடுகளைக் கொண்டு வந்து சேர்த்தல் என்பது அதிப்படியான வேலைப்பளுவையும் அலைச்சலையும் உண்டாக்குகிறது.

மேய்ச்சலின் போதோ பயணத்தின் போதோ எதிர்பாராமல் மனிதர்கள் அணிந்திருக்கும் காலணிகளை மீறிக் குத்தும் முட்கள் ஆணிகள், கட்டைகள் மரண வேதனையைக் கொடுக்கக் கூடியவையாக இருப்பதைப் பதிவுசெய்கின்றனர். இருட்டில் பயணம் செய்யும்போது மேடுபள்ளங்கள் தெரியாமல் வழுக்கி விழுந்து விடுவதால் கைகால்கள் உடைதல், சுழுக்கு உண்டாகுதல் ஏற்படுகின்றன.

அடிக்கடி மேற்கொள்ளும் பயணம் மனச்சோர்வையும் உடல் சோர்வையும் இத்தொழிலின் மீது வெறுப்பையும் ஏற்படுத்துகின்றன. விஷப் பூச்சிகளான பாம்பு, பூரான், தேள், தேனீக்கள் கூட்டம், சில வண்டுகள் ஆடுகள் மற்றும் மனிதர்களைத் தீண்டுவதால் இறப்பு, நீண்டநாள் உடல் பிரச்சினைகள், கடுமையான வேதனைகளைக் கொடுக்கின்றன என்று கூறுகின்றனர்.

இக்காலத்தில் ஆங்காங்கே உணவுகளுடன் கூடிய குப்பைகளைக் கொட்டிவைத்துள்ளனர். அதில் உள்ள மிதமிஞ்சிய உணவுகளை அளவுக்கு அதிகமாக உண்ணும் போதும் குப்பைகளுடன் கூடிய நெகிழிப்பைகள், பிளேடுகள், ஊழிகள் போன்றவற்றையும் சேர்த்து தின்று விடுகின்றன. இவை செரிமானக் கோளாறு மற்றும் உயிரிழப்புளை ஏற்படுத்துகின்றன.

கட்டுப்படாமல் ஓடும் ஆடுகளைக் கடும் கோபத்தில் கல்லால் எறியும்போதோ, அடித்துத் தாக்கி மறிக்கும் போதோ சில நேரங்களில் கால் ஒடிதல், இறப்பு, காயம் ஏற்படுதல், கண் கெட்டுவிடுதல் போன்றவை நிகழ்ந்துவிடுகின்றன.

மலைகள், அடர்ந்த காடுகள், தோப்புகள், ஆடுகளின் உயரத்திற்கு மேல் வளர்ந்த செடிகொடி புற்கள் கொண்ட பகுதிகளில் மேய்ச்சலின் போது அவை இரண்டு மூன்று துண்டங்களாகப் பிரிந்து போய்விடும் நிலை ஏற்படுகிறது. அவை விவசாயக் காடுகளை அழித்துவிடக்கூடும், காணாமல் போய்விடக்கூடும் அவற்றை ஒன்று சேர்ப்பது என்பது மிகவும் கடினமானதாக அமைந்து விடுகிறது.

புதிய இடங்களில் குடிசைகளை அமைக்கும் பொழுது தண்ணீர் எடுப்பதில், குடிநீர் கிடைப்பதில், துணிதுவைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. சில இடங்களில் மின்சாரம் என்பது எட்டாக்கனியாகிவிடுகிறது (தற்காலத்தில் சோலார் பிளேட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்).

இவ்வாறு ஆடுமேய்ச்சலில் வலசை போகும்போது இம்மக்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.

**ஆடுமேய்க்கும் தொழிலை மேற்கொள்ளுபவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள்**

ஆடுமேய்க்கும் மக்களை அதிகார வர்க்கத்தினர் ஒருவகையான வாஞ்சையுடன் எதிர்கொள்கின்றனர். ஆதிக்க வர்க்கம் இம்மக்களை மரியாதை குறைவாக நடத்தப்படுவதைக் காணமுடிகிறது.

இவர்களை அகதிகளைப் போல் எண்ணுதல், மரியாதை குறைவாகப் பேசுதல், நடத்துதல், அடிமைத்தனப்படுத்துதல், அதிகாரம் பண்ணுதல், ஊதியமில்லா வேலை வாங்குதல் போன்றவற்றை ஆதிக்க வர்க்கம் நிகழ்த்துகின்றன.

பெண்களுக்குப் பாதுகாப்பின்மை, வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுதல், பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்படுதல், அடித்து விரட்டப்படுதல், அபகரித்தல் போன்றவை பெண்களின் மீது கட்டவிழ்த்து விடப்படுவதை நோக்கமுடிகிறது.

புதிய இடங்களுக்குச் செல்லும் போது ஏற்படும் மேய்ச்சல் தொழில் போட்டிகள், அதனால் ஏற்படும் சண்டை சச்சரவுகள், விவசாயப் பயிர்களில் தெரியாமலோ, இரவு நேரத்தில் காவலை மீறியோ புகுந்து அழித்து விடுதல் போன்றவற்றால் அம்மக்களுக்கு ஆதிக்க வர்க்கத்தினரால் இன்னல்கள் ஏற்படுகின்றன.

குட்டிகளை அடைத்திருக்கும் கொடாப்புகள் மற்றும் குடியிருப்புகளில் ஏற்படும் தீவிபத்துகள் இம்மக்களின் பொருளாதாரத்தில் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன.

தொடர்ச்சியாக ஆடுகளை மேய்ப்பவர்களுக்கு ஓடமுடியாமல் போவது, கால் வளைதல், முழங்கால் வலி, கண்பார்வைக் குறைபாடு, ஆடுகள் உண்டாக்கும் தூசியினால் ஏற்படும் ஆஸ்த்துமா, மழை மற்றும் பனியில் இருப்பதால் ஏற்படும் நாள்பட்ட காய்ச்சல் மற்றும் சலி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. கீழே விழுந்து பெரிய அடிபட்டவர்கள் கடைசி காலத்தில் புத்தி சுவாதீனக் கோளாறு ஏற்பட்டு இறந்து போகின்ற நிலை உள்ளது.

தற்காலத்தில் கம்பிவேலிகளைப் போட்டு காடுகளும் வனவிலங்குச் சட்டங்களால் மலைகளும் பாதுகாக்கப்படுவதால் மேய்ச்சல் நிலம் மிகவும் குறைந்துவிட்டது. கம்பி வேலிகளுக்குள் துளைபோட்டு உள்ளே போன ஆடு துளையை மறந்துவிட்டு மேய்ச்சலுக்குச் சென்றவர்களை இன்னலுக்கு உட்படுத்துகிறது.

இத்தனை சிக்கல்கள் இருப்பதால் ஆடுமேய்க்க ஆட்கள் கிடைப்பதில்லை. இளைஞர்களும் ஆடுமேய்க்க முன்வருவதில்லை. அப்படியே இளைஞர்கள் ஆடுமேய்க்கும் தொழிலுக்கு வந்தாலும் ஆட்டுத்தொழிலின் சிக்கல்களை அறிந்தவர்கள் அவர்களுக்கு பெண் கொடுக்க முன்வருவதில்லை.

ஆடுமேய்க்கும் வேலைக்கு வருபவர்கள் முன்பணம் கேட்கின்றனர். முன்பணத்தை வாங்கிக் கொண்டு ஆடுமேய்க்க வராமல் நாட்களைக் கடத்துதல், ஏமாற்றுதல், சில நாட்கள் ஆடு மேய்த்து விட்டு தப்பியோடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். வியாபாரிகள், ஆடுகள் விற்ற ஆட்களுக்குரிய பணத்தைக் கொடுக்காமல் தள்ளிப் போடுதல், தராமல் இழுத்தடித்தல், ஏமாற்றுதல், சிறுகச் சிறுக கொடுத்தல் போன்ற செயல்களைச் செய்கின்றனர். இதுபோன்ற நிழ்வுகள் அலைச்சலையும் மனச் சோர்வையும் பிரச்சினைகளையும் இன்னல்களையும் ஏற்படுத்துகின்றன.

இத்தொழிலில் ஈடுபடுபவர்களால் நிம்மதியாக நேரத்திற்கு சாப்பிட, தூங்க முடிவதில்லை. நல்ல, தீட்டு நிகழ்வுகளுக்கு நேரத்திற்கு போகமுடியாத நிலை, நல்ல நாள், பண்டிகை, திருவிழாவை குடும்பம் குழந்தைகளுடன் ஒன்றாக நிம்மதியாக இருந்து கொண்டாட முடியாத சூழல் ஏற்படுகிறது.

ஆடுகளைப் பிறரிடம் மேய்க்கவிடும் முறைகளான வாரத்துக்கு விடுதல், குட்டி வாரம் முறைகளிலும் முறைகேடுகள் செய்து ஏமாற்றுகின்றனர். இதனால் பலர் இத்தொழிலையே விட்டு விட்டு வெளியேறி விடுகின்றனர். இவ்வாறு ஆடுமேய்க்கும் தொழிலில் இவ்வின மக்கள் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

**முடிவுரை**

சங்க கால முல்லைத் திணை மக்கள் கால்நடை மேய்ச்சல் தொழிலில் எதிர்கொண்ட சிக்கல்களை இன்றைய சூழலில் இம்மக்களும் எதிர்கொண்டு வருகின்றனர் என்பதை அறியமுடிகிறது. கால்நடைகளை கவர்ந்து செல்லுதல், விலங்குகள் பிடித்துச் செல்லுதல் என்ற பல்வேறு பிரச்சனைகளை இம்மக்கள் சமகாலத்தில் எதிர்கொள்கின்றனர்.

ஆடுகள் மேய்ச்சலின்போது ஆடுகளுக்கு ஏற்படும் சிக்கல்களையும் ஆடு மேய்ப்பவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் அறியமுடிகிறது. ஆதிக்க வர்க்கம் இம்மக்களை மரியாதை குறைவாக நடத்துவதை விளங்க முடிகிறது.

ஆடு மேய்ச்சல் தொழிலில் இம்மக்கள் பல்வேறு விதமான இன்னல்களை சந்திக்கின்றனர். ஆடுகள் ஒருபுறம் இவர்களைத் துன்புறுத்துவதும், உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்துவதும், களவாடப்படுவதால் பொருளாதார இழப்பு ஏற்படுவதும், இத்தொழிலைச் செய்ய ஆட்கள் முன்வராத நிலையும் இம்மக்கள் இத்தொழிலில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படுவதையும்

காணமுடிகிறது.

சங்க காலத்திலிருந்து எஞ்சி நிலைத்தவையாக காணப்படும் தொழிலான கால்நடை மேய்ச்சல் தற்காலத்தில் சிதைவிற்குள்ளாவதை அறியமுடிகிறது.

**தகவலாளர் பட்டியல்**

| வ. எண். | பெயர் | வயது | பாலினம் | முகவரி |
|---|---|---|---|---|
| 1. | நல்லார்.பூ., | 64 | ஆண் | காளாஞ்சிபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 2. | உடையம்மாள்.ந., | 59 | பெண் | காளாஞ்சிபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 3. | முருகவேல்.இரா., | 47 | ஆண் | தங்கச்சியம்மாபட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 4. | வடமலை.மு., | 24 | ஆண் | தலைவாசல்புதூர், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல். |
| 5. | பூமிநாதன்.தி., | 38 | ஆண் | கணக்கன்பட்டி, பழநி, திண்டுக்கல். |
| 6. | ஆறுமுகவள்ளி.இரா., | 29 | பெண் | திருமலைராயபுரம், ஸ்ரீராமபுரம், திண்டுக்கல். |
| 7. | செல்வக்குமார்.இரா., | 43 | ஆண் | கேதையுறும்பு, வேடசந்தூர்,திண்டுக்கல் |
| 8. | முருகானந்தம்.சு., | 42 | ஆண் | வில்வமரத்துப்பட்டி, விளாத்திக்குளம், தூத்துக்குடி. |
| 9. | மாரிமுத்து.க., | 37 | ஆண் | அண்ணாமலை நகர், விளாத்திக்குளம், தூத்துக்குடி. |
| 10. | கந்தசாமி.பூ., | 69 | ஆண் | வைகாசிபட்டி, பாலமேடு, மதுரை. |

**துணைநூற்பட்டியல்**

1. பக்தவத்சல பாரதி, 2012, தமிழர் மானிடவியல், மூன்றாம் பதிப்பு. புத்தாநத்தம். அடையாளம்.

2. பக்தவத்சல பாரதி, 2016, பண்பாட்டு மானுடவியல், முதற் பதிப்பு. சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம்.

**Bibliography**

1. *Bhakthavatsala Bharathi, 2012, Tamil Anthropology, Third Edition. Puththanatham, Adaiyalam.*

2. *Bhakthavatsala Bharathi, 2016, Cultural Anthropology, First Edition. Chidambaram, Meyyappan Publishers.*

**Cite this Article in English**

**Seenivasan.N, Ravi. S "The contemporary sheep herding occupation of the Mullai landscape community and the challenges faced in it"** *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 1, January 2026, pp. 35-43*